நாகப்பட்டினம் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை:திருமதி.ம.க.செ.சுபாஷினி ,எம்.எஸ்சி.,பி.எட்.

ப.மு.எண்: 1401/அ1/2025 , நாள். 19.03.2025.

பொருள்: பள்ளிக்கல்வித்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - நாகப்பட்டினம் மாவட்டம் - மாவட்டக்கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி), இளநிலை உதவியாளர் திரு.வை.குமார் என்பாருக்கு - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை

1. நாகப்பட்டினம் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.5240/அ1/2011, நாள். 23.11.2012..
2. அரசாணை(நிலை) எண் 101, பள்ளிக்கல்வித் ( வரவுசெலவுத்திட்டம்) துறை, நாள்.18.05.2018.
3. நாகப்பட்டினம் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.3159/அ1/2019, நாள். 08.05.2019.
4. மயிலாடுதுறை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் மூ.மு.எண்.1381/அ1/2019, நாள். 20.08.2019.
5. மயிலாடுதுறை மாவட்டக்கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள் ந.க.எண்.394/அ1/2020, நாள். 19.10.2020.
6. மயிலாடுதுறை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் மூ.மு.எண்.3152/அ1/2021, நாள்.10.12.2021.
7. நாகப்பட்டினம் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.11315/அ1/2022, நாள். 09.01.2023..
8. நாகப்பட்டினம் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2347/அ1/2023, நாள். 21.11.2023.
9. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித்( ப.க1(1))துறை, நாள். 09.09.2022.
10. நாகப்பட்டினம் மாவட்டக்கல்வி அலுவலரின்(தொடக்கக்கல்வி) கடித ந.க.எண்.0342/அ1/2025, நாள். 04.03.2025.

..........

பார்வை 08 இல் காணும் செயல்முறைகளின்படி நாகப்பட்டினம் மாவட்டம், மாவட்டக்கல்வி அலுவலகத்திற்கு (தொடக்கக்கல்வி) இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு 22.11.2023 முற்பகல் முதல் பணிபுரிந்துவரும் திரு.வை.குமார் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குவது தொடர்பான கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டது.

பார்வை 02 மற்றும் 09 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படி இளநிலை உதவியாளர் பதவிக்குரிய நியமன அலுவலர் "முதன்மைக்கல்வி அலுவலர்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

எனவே பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளில் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய நியமன அலுவலரான முதன்மைக்கல்வி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் / பதவி / மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | முதன்முதலில் பணியில் சேர்ந்த பதவி மற்றும் நாள். | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| திரு.வை.குமார், இளநிலை உதவியாளர், மாவட்டக்கல்வி அலுவலகம், (தொடக்கக்கல்வி) நாகப்பட்டினம் மாவட்டம். | துப்புரவாளர், 26.11.2012 முற்பகல் | 22.11.2023 முற்பகல் | 22.11.2023 முற்பகல் |

1. இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்தில் தகுதிகாண்பருவத்தினை முடிக்க வேண்டும்.மேலும் தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படவேண்டும்.

2. ஈராண்டு காலத்தில் தமிழ்நாடு மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

3. தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

4. தனியர் அளித்துள்ள கல்விச்சான்றுகள் மற்றும் இதர சான்றுகள் உண்மைக்கு புறம்பானவை என கண்டறியப்பட்டால், எவ்வித முன்னறிவிப்புமின்றி பணியிலிருந்து நீக்கம் செய்து ஆணை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

5. பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை தொடர்புடையவரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இணைப்பு: தொடர்புடையவரின் பணிப்பதிவேடு I

முதன்மைக்கல்வி அலுவலர்,
நாகப்பட்டினம்.

19/3/25

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர், (உரிய வழியாக)

நகல் : மாவட்டக்கல்வி அலுவலர், (தொடக்கக்கல்வி) நாகப்பட்டினம்.

Scanned with OKEN Scanner